பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**02 07 2026 THURSDAY 6.30 PM**

**மாநிலச்செய்திகள்**

**தலைப்புச் செய்திகள்**

**1)** இந்தியா — ஜப்பான் இருதரப்பு உறவு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

**2)** வைகை ஆற்றை தூய்மைப்படுத்த இளைஞர்கள் முன்வர வேண்டும் என்று தமிழக ஆளுநர் திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் கேட்டுக்கொண்டுள்ளார்.

**3)** வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார திட்டம், கிராம மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் என்று மாநில அமைச்சர் திரு ரஞ்சித் குமார் கூறியுள்ளார்.

**4)** கோவை, நீலகிரி மற்றும் தேனி மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**5)** ருமேனியா சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் — விஜய் சுந்தர் பிரசாந்த் இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

- இனி விரிவான செய்திகள் —

<<<<<<<>>>>>>>

இந்தியா — ஜப்பான் இருதரப்பு உறவு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று இந்தியா — ஜப்பான் கூட்டு பொருளாதார மாநாட்டில் உரையாற்றிய அவர், இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்பு பல துறைகளிலும் வெற்றியடைந்திருப்பதாக குறிப்பிட்டார்.

இந்தியாவின் விரைவான வளர்ச்சிக்கு ஏற்ப ஜப்பான் அளித்துவரும் முதலீடுகள் ஒட்டுமொத்த உலகிற்கும் பயனளிப்பதாக அவர் கூறினார்.

இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் ஆற்றல் மிக்கதாகவும், பயன் அளிக்கும் வகையிலும் உயர்த்துவதற்கு இரு நாடுகளும் தொடர்ந்து முயற்சி மேற்கொள்ளும் என்றும் அவர் தெரிவித்தார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், பாதுகாப்பு, சுகாதாரம் பொருளாதார பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் ஜப்பான் முதலீடு செய்வதற்கான ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியிருப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

விநியோக சங்கிலி தொடரில் ஏற்பட்டுள்ள தடைகள் காரணமாக உலகளாவிய வர்த்தகம் பாதிப்புக்கு உள்ளாகியிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

உலகின் பல நாடுகள் பொருளாதார நெருக்கடியை சந்தித்துவரும் சூழ்நிலையிலும் கடந்த நிதியாண்டில் நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு

உற்பத்தி 7 புள்ளி ஏழு சதவீதமாக அதிகரித்துள்ளது என்றும், விரைவாக பொருளாதார வளர்ச்சி பெற்று வரும் நாடுகளின் பட்டியலில் இந்தியா நீடித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பல்வேறு துறைகளில் தனியார் துறை முதலீடுகளை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை இந்தியா மேற்கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

கடந்த நான்காண்டுகளில் ஜப்பான் நாட்டின் சர்வதேச ஒத்துழைப்புக்கான வங்கி மேற்கொண்ட ஆய்வில், இந்தியா முதலீட்டுக்கு உகந்த நாடாக உறுதி செய்யப்பட்டுள்ளதையும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

இம்மாநாட்டில் உரையாற்றிய ஜப்பான் பிரதமர் திருமதி **Sanae Takaiche**, இந்தியாவுடன் பல்வேறு துறைகளில் ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள் ஏற்பட்டுள்ள போதிலும், எரிசக்தி, பாதுகாப்பும் மிகுந்த முக்கியத்துவம் பெறுவதாக குறிப்பிட்டார்.

தாராள மற்றும் வெளிப்படையான எரிசக்தி வர்த்தகத்திற்கான வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளதாகவும் திருமதி **Sanae Takaiche** கூறினார்.

<<<<<<<>>>>>>>

வைகை ஆற்றை தூய்மைப்படுத்த இளைஞர்கள் முன்வர வேண்டும் என்று தமிழக ஆளுநர் திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மதுரையில் தென்னிந்திய ஆய்வு மையம் மற்றும் தனியார் கல்லூரி இணைந்து நடத்திய நேதாஜியின் INA சுதந்திர போராட்ட வீரர்களை போற்றும் கட்டுரைப் போட்டிக்கான பரிசளிப்பு விழாவில் அவர் உரையாற்றினார்.

குஜராத்தில் உள்ள நிரஞ்சனா ஆற்றை இளைஞர்கள் சுத்தம் செய்ததை அவர் எடுத்துரைத்தார்.

அதேபோல், வைகை ஆற்றை சுத்தம் செய்யவும் இளைஞர்கள் முன்வர வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

நாட்டின் வளர்ச்சிக்கு இளையோரின் பங்கு முக்கியமானது என்று கூறிய அவர், இதற்காக அனைத்து மக்களின் ஒத்துழைப்பு அவசியம் என்று தெரிவித்தார்.

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் இந்த தேசத்திற்காக உறுதி மொழி எடுத்ததுபோல் நமது நாட்டை முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்ல நாம் உறுதி ஏற்போம் என்றும் திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் கூறினார்.

<<<<<<<>>>>>>>

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக்கூட்டம் முதலமைச்சர் திரு விஜய் தலைமையில் இன்று நடைபெற்றது.

சென்னை தலைமைச்செயலகத்தில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் மாநில அமைச்சர்கள் திரு கே ஏ செங்கோட்டையன், திரு மரியவில்சன் மற்றும் அதிகாரிகள் பலர் பங்கேற்றனர்.

<<<<<<<>>>>>>>

உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு உயர்தரத்திலான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்கு மாநில அரசு முன்னுரிமை அளித்து வருவதாக மாநில மின்துறை அமைச்சர் திரு நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

சென்னையை அடுத்த பெருங்குடியில் உள்ள தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்ட பல்கலைக்கழகத்தில் மாணவர் விடுதி கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டி பேசிய அமைச்சர், சட்டக்கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கும், மாணவர்களுக்கான அமைதியான மற்றும் தரமான கல்விச்சூழலை உருவாக்கித் தருவதற்கும் மாநில அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவித்தார்.

மாணவர்களின் தேவையை முழுமையாக பூர்த்தி செய்யும் வகையில் அனைத்து நவீன அடிப்படை வசதிகளுடன் இந்த கட்டிடம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>>

விவசாயிகளுக்கு தேவையான விதைகள், நடவுப்பொருட்கள், உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகள் உரிய நேரத்தில் கிடைக்க மாநில அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக வேளாண்துறை அமைச்சர் திரு வினோத் தெரிவித்துள்ளார்.

சேலத்தில் இன்று நடைபெற்ற விவசாயிகள் கருத்துக்கேட்பு கூட்டத்தில் உரையாற்றிய அவர், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் வகையில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும், சமையல் எண்ணெய் இயக்கம் மற்றும் பருத்தி இயக்கம் போன்ற முக்கியத் திட்டங்களை தொடர்ச்சியாக செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

விவசாயிகளின் வருவாயை பெருக்கும் நோக்கில், காய்கறி, பழம், மலர் சாகுபடி பரப்பை விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

விவசாயிகளின் கோரிக்கைகள் முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, விரைந்து தீர்வுகாணப்படும் என்றும் திரு வினோத் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார திட்டம், கிராம மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் என்று மாநில அமைச்சர் திரு ரஞ்சித் குமார் தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்டம் களக்காட்டூர் ஊராட்சியில், இத்திட்டத்தினை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

இத்திட்டத்துக்கான ஊதியம் நாளொன்றுக்கு 336 ரூபாயிலிருந்து, 345 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளதையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

<<<<<<<>>>>>>>

விவசாயிகள் மற்றும் நெசவாளர்களின் கூட்டுறவு சங்க கடன்களை ரத்து செய்ய மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச்செயலாளர் திரு வீரபாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

காஞ்சிபுரத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதாரத் திட்டத்திற்கான வேலை நாட்களை ஆண்டுக்கு 200 நாட்களாக உயர்த்த வேண்டும் என்றும், நாளொன்றுக்கு 700 ரூபாய் ஊதியம் வழங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

தூய்மைப் பணியாளர்களை அரசுப்பணியாளர்களாக சேர்க்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

விவசாயிகள் நலனை காக்க பாலாற்றில் தடுப்பணைகள் கட்ட வேண்டும் என்றும் திரு வீரபாண்டியன் கேட்டுக்கொண்டார்.

<<<<<<<>>>>>>>

கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகள், நீலகிரி மற்றும் தேனி மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — வி ஆர் துரை — 50 Sec. )***

<<<<<<<>>>>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

சென்னை ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்புகளில் நடைபெற்றுவரும் புனரமைப்புப் பணிகளை மாநில அமைச்சர் திரு ராஜ்குமார் இன்று ஆய்வு செய்தார்.

------------------

தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில் புதிய மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தை மாவட்ட முதன்மை நீதிபதி சுபாதேவி இன்று திறந்துவைத்தார்.

-------------------

விழுப்புரத்தில் போதைப்பொருள் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திரு ஷேக் அப்துல் ரகுமான் இன்று தொடங்கிவைத்தார்.

----------------

சென்னை அண்ணாநகர் கோபுர பூங்காவினை பார்வையிட்ட மாநகராட்சி ஆணையர் திரு சமீரன், பூங்காவில் பராமரிப்புப்பணிகளை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

<<<<<<<>>>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

ருமேனியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் — விஜய் சுந்தர் பிரசாந்த் இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 6-3, 2-6, 11-9 என்ற செட் கணக்கில், ருமேனியா இணையை வென்றது.**

**-----------------**

**இந்தியா-ஏ அணிக்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல்நாள் ஆட்டநேர இறுதியில் இலங்கை-ஏ அணி முதல் இன்னிங்சில் 5 விக்கெட் இழப்பிற்கு 288 ரன் எடுத்துள்ளது.**

**Galle-ல் இன்று தொடங்கிய இப்போட்டியில் டாஸ் வென்ற இந்தியா ஏ அணி முதலில் பந்துவீச தீர்மானித்தது.**

**<<<<<<<END>>>>>>>**